A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 68 / 2020**

திருமதி. N. ருக்மணி,
w/o. நந்திகேசவன்,
SF, 41/1B, ஆரோக்கிய பால் நிலையம்,
குரும்பேரி, SS III,
குரும்பேரி அஞ்சல்,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 652. . . . . மேல்முறையீட்டாளர்

எதிர்

உதவி மின் பொறியாளர்/விசமங்கலம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரசாங்க வளாகம் விசமங்கலம்,
திருப்பத்தூர் தாலுக்கா,
வேலூர் மாவட்டம் – 635 652. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 06–01–2021**

1. திருமதி. N. ருக்மணி, w/o. நந்திகேசவன், SF, 41/1B, ஆரோக்கிய பால் நிலையம், குரும்பேரி, SS III, குரும்பேரி அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம் – 635 652 அவர்களின் 22.11.2020 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 68 / 2020 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் தன்னுடைய பால் குளிரூட்டும் நிலையத்திற்கு வழங்கப்பட்ட வீதப்பட்டி IIIB-யை வீதப்பட்டி V–ஆக மாற்றப்பட்டுள்ளது என்பதை உதவி பொறியாளர்/ விசமங்கலம் அவர்களின் கடிதத்தின் மூலம் அறியப்பட்டதாகவும் எனவே பால் குளிரூட்டும் நிலையத்திற்கு வீதப்பட்டி IIIB-ற்கு மாற்றி தருமாரு அளித்த புகார் மீது மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் நடவடிக்கை எடுக்காமல் நிராகரித்துவிட்டதால் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரரான உதவி மின் பொறியாளர் / விசமங்கலம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 15.12.2020 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/ திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 24.12.2020 நாளிட்ட பதிலுரையை சமர்ப்பித்துள்ளார்.

5. இதற்கிடையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய 29.12.2020 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு மின்குறைத்தீர்ப்பாளர் அவர்களின் முகவரியிடப்பட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை ரத்து செய்யுமாறு தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி கடிதத்தின் பகுதி நகல் (extract) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு கிராம சர்வே எண் 41/1Bல் 500 சதுர அடி கொண்ட சிறிய கட்டிடம் சொந்தமாக உள்ளது. இதற்கு மின்வாரியத்திடம் இருந்து மின் இணைப்பு பெற்றுள்ளேன். மின் இணைப்பு எண் 08–408–010–2058 ஆகும். இந்த கட்டிடத்தை நான் பால் குளிரூட்டும் தொழில் செய்வதற்காக ஹட்சன் என்ற நிறுவனத்திற்கு ஏழு வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விட்டுள்ளேன். இதற்காக நான் மாதவாடகை அந்நிறுவனத்திடமிருந்து பெற்று வருகிறேன். அதில் பால் குளிரூட்டும் தொழில் இயங்கி வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்திடமிருந்து தற்போது எனக்கு கடிதம் வந்துள்ளது. அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மின்சார வாரியத்திற்கு எதிராக நான் புகார் ஏதும் தெரிவிக்கவில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன். அந்த புகாரில், நான் புகார் அளித்ததாக என் பெயரில் யாரோ எனது கையொப்பம் இட்டு புகார் அளித்துள்ளனர். எனவே எனக்கும் இந்த புகாருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை, எனவே இந்த புகாரை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*
>
> *-sd-*
> *மேல்முறையீட்டாளர்.”*

6. மேல்முறையீட்டாளர், தனது 29.12.2020 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை ரத்து செய்யுமாறு தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.68/2020 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திருமதி. N. ருக்மணி,
w/o. நந்திகேசவன்,
SF, 41/1B, ஆரோக்கிய பால் நிலையம்,
குரும்பேரி, SS III,
குரும்பேரி அஞ்சல்,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 652.

2) உதவி மின் பொறியாளர்/விசமங்கலம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரசாங்க வளாகம் விசமங்கலம்,
திருப்பத்தூர் தாலுக்கா,
வேலூர் மாவட்டம் – 635 652.

3) மேற்பார்வை பொறியாளர், – By Mail
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி,
திருப்பத்தூர் – 635 601.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Mail
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.